மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்13/2014

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சச்சிதானந்தம் | ஜாதி | |
| த/பெ. | தங்கவேல் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 67 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 09-01-2023 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** தொடர்ச்சி

21) 3 ம் பிரதிவாதி என்ன கட்சி செய்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 3 ம் பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில் பழைய புல எண்.206/106, 206/107, ஆகிய புல எண்களில் கண்ட செல்லையா பிள்ளை புஞ்சைக்கும், சுப்பிரமணியப்பிள்ளை வகையறா புஞ்சைக்கும் கிழக்கு , வீரப்ப பிள்ளை புஞ்சைக்கு வடக்கு, காத்தாயி அம்மாள் புஞ்சைக்கு மேற்கு, வாரிக்கு தெற்கு என்று நான்கெல்லை கண்டு 50 செண்ட் விஸ்தீர்ணம் ஆதியில் குப்பம்மாள் என்பவருக்குச் சொந்தமாக இருந்ததாக கட்சி செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

22) மேற்படி குப்பம்மாளிடம் இருந்து 3 ம் பிரதிவாதியின் தாயார் சிவகாமியம்மாள் 3 ம் பிரதிவாதிக்கு கார்டியன் என்ற முறையில் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் மேற்படி கிரையப்பத்திரத்தில் தாவா சொத்து கட்டுப்படாது . நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் மேற்படி 3 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தில் தாவா சொத்து கட்டுப்பட்டது என்றால் சரியல்ல.

23) மேற்கண்டவாறு கார்டியன் என்ற முறையில் சிவகாமியம்மாள் அனுபவித்து வந்ததால் புல எண். 206/106 க்கு சிவகாமியம்மாள் பெயருக்கு செட்டில்மெண்ட் காலத்தில் 36 செண்டுக்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மீதமுள்ள 14 செண்ட்டுக்கு புல எண். 206/107 விஸ்தீர்ணம் 76 செண்டுடன் அளவை செய்து முருகையாப்பிள்ளை மனைவி காத்தாயிம்மாளுக்கு பட்டா கொடுத்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

24) மேற்கண்டவாறு காத்தாயியம்மாளுக்கு பட்டா கொடுத்தது தவறு என்றாலும் 3ம் பிரதிவாதிக்கு தான் பட்டா கொடுத்து இருக்க வேண்டும் என்றாலும் முறையாக விஸ்தீர்ணம் செய்து பட்டா கொடுக்கப்படவில்லை. 3ம் பிரதிவாதி மேஜரான பிறகு மேற்கண்ட 50 செண்டை 3ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

25) மேற்கண்டவாறு 3ம் பிரதிவாதி அனுபவித்து வந்ததில் மேற்படி 50 செண்ட்டின் மேல் புறம் 31 செண்ட்டை 26,03.1974 ஆம் தேதி 3ம் பிரதிவாதி செல்லையாபிள்ளை மனைவி உண்ணாமலை அம்மாளுக்கும் செல்லையா பிள்ளை மகன் சுப்பிரமணியனுக்கும் கிரையம் கொடுத்து விட்டது என்றால் அதற்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லை.

26) நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு கிரையம் கொடுத்தது போக கீழ்புறம் 19 செண்ட்டை 3ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி அனுபவித்து வருவதை அனுசரித்து நகர நில அளவையில் வார்டு டி.பிளாக் எண். 10 நகர புல எண். 47 ஆக 3ம் பிரதிவாதிக்கும் சம்பூர்ணத்தம்மாள், மற்றும் தங்கவேல் பிள்ளைக்கு கூட்டுப்பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல

27)மேற்கண்டவாறு கூட்டுப்பட்டா கொடுக்கப்பட்டதில் 3ம் பிரதிவாதிக்கு 19 செண்ட் பாத்தியம் என்றால் சரியல்ல. எனது தாயார் சம்பூர்ணத்தம்மாளுக்கு நான் கணேசன், சுப்பிரமணியன், வீரப்பன் , பஞ்சவர்ணம், என ஐந்து மகன்கள் என்றால் சரிதான். மேற்கண்டவர்களில் கணேசன் அவரது வாரிசுகளை விட்டு விட்டு இறந்து விட்டாரா என்றால் சரிதான்.

28) வீரப்பனும் சுப்பிரமணியனும், அவரது வாரிசுகளை விட்டுவிட்டு இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் சம்பூர்ணத்தம்மாளின் வாரிசுகளைப் பற்றி சொல்லவில்லையென்றால் சரிதான். நான் வேண்டுமென்றே என் தாயாரின் வாரிசுகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

29) எனது தாயாரின் அம்மா கிரையம் வாங்கிய சொத்துக்கும் 3ம் பிரதிவாதிக்காக கார்டியன் என்ற முறையில் அவரது தாயார் கிரையம் வாங்கிய சொத்துக்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் சம்பூர்ணத்தம்மாளின் வாரிசுகளுக்கு இடையில் எந்த ஆண்டு பாகம் பிரிக்கப்பட்டது என்று சொல்லவில்லையென்றால் சரிதான்.

30) நாங்கள் பாகம் பிரிக்கவில்லையென்பதால் தான் எந்த ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டோம் என்று சொல்லவில்லையென்றால் சரியல்ல. வா.சா.3 மற்றும் வா.சா.4 ஆவணங்களுக்கும் 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

31) எனது தாயார் சம்பூர்ணத்தம்மாளின் இறப்புச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். 2ம் பிரதிவாதி இறந்த பிறகு அவரை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா வழக்கிற்கு வழக்கு மூலமே கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை மூலம் கிடையாது என்பதால் நான் நிறந்தர தடையாணை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

32) எனக்கு தாவாப் பரிகாரம் கிடைக்கத்தக்கது இல்லையென்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதால் தான் தாவா வழக்கில் புல எண் குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.